செ.வெ.எண். 49 நாள்: 18.08.2017

# பத்திரிக்கை செய்தி

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் இந்நாட்களில் உற்பத்தி போட்டியில் வெற்றியடையவும், தங்களுக்கான இடத்தை தக்க வைத்துக்கொள்ளவும் ஆற்றல் சேமிப்பு (**Conservation of Energy** ) அத்தியாவசியமாகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தங்களது தயாரிப்பு முறைகளில் பயன்படுத்தும் ஆற்றலை தணிக்கை செய்து , ஆற்றலை சேமித்து நிறுவனத்தின் இலாபத்தை அதிகப்படுத்த **"ஆற்றல் தணிக்கை மற்றும் ஆற்றல் சேமிப்பை மேம்படுத்துதல்"** ( Promotion of Energy Audit and Conservation of Energy) **PEACE** என்ற சிறப்புத் திட்டத்தை தமிழக அரசு புதிதாக அறிவித்துள்ளது. (அரசாணை எண் : 35 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (G) துறை, நாள் 09.06.2017. ) இத்திட்டம் மாவட்டத் தொழில் மையம் மூலமாக செயல்படுத்தப்படுகிறது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான **PEACE** சிறப்பு திட்டத்தின் முக்கிய அம்சங்கள் :

1. அதிக ஆற்றலைச் செலவழிக்கும் நிறுவனங்களுக்கு சிறந்த வல்லுநர்கள் மூலம் ஆற்றல் சேமிப்புக்கான தடைகளை களைய தகுந்த புதிய தொழில் நுட்பங்களை அறிய செய்தல் மற்றும் **விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.**
2. நிறுவனங்களின் ஆற்றல் ஆளுமை திறன் மூலம் உற்பத்தி செலவை கட்டுப்படுத்துதல் மற்றும் மாசுக்காற்றை குறைந்த அளவில் வளிமண்டலத்தில் வெளியிட **பயிற்சி அளித்தல்.**
3. நிறுவனங்களின் ஆற்றல் சேமிப்பு சதவீதத்தை அதிகரிக்க, அங்கீகரிக்கப்பட்ட ஆற்றல் தணிக்கையாளர்கள் மூலம் ஆற்றல் தணிக்கையை தேர்ந்தெடுக்க ஊக்குவித்தல் மற்றும் நிறுவனங்கள் பயன்படுத்தும் மின்சார, இயந்திர மற்றும் வெப்ப ஆற்றல்களில் சேமிப்பை கண்டறிய, **விரிவான ஆற்றல் தணிக்கை செய்ய ஏற்படும் மொத்த செலவில் 50 சதவீதம் (அதிக பட்சம் ரூ.75,000/-) மானியம் வழங்குதல்.**
4. ஆற்றல் தணிக்கையின் பரிந்துரையின்படி குறைந்தபட்சம் 15 சதவீதம் ஆற்றல் சேமிக்கும் நிறுவனங்களின் **தகுந்த உபகரணங்களுக்கான தொகையில் 25 சதவீதம் (அதிக பட்சம் ரூ.2 லட்சம் ) ஊக்க தொகை வழங்குதல்.**

திருநெல்வேலி மாவட்டத்தில் செயல்படுகின்ற குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஆற்றல் சேமிப்பின் அவசியத்தை விளக்கவும், ஆற்றல் தணிக்கையின் பலன்களை எடுத்துரைக்கவும் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியரின் தலைமையில் " **ஆற்றல் சேமிப்பு விழிப்புணர்வு** ~~**கருத்தரங்கம்**~~ முகாம் " 22.08.2017 செவ்வாய் கிழமை / ~~24.08.2017 வியாழக்கிழமையில்~~ திருநெல்வேலி மாவட்ட அறிவியல் மையத்தில் நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அனைத்து குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் , மேற்படி விழிப்புணர்வு கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு தமிழக அரசின் சிறப்பு திட்டமான " **PEACE** " , இன் பலன்களை அறியவும் , மேலும் விவரங்களுக்கு பொதுமேலாளர், மாவட்டத்தொழில் மையம் , திருநெல்வேலி அவர்களை தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

தொலைபேசி எண்கள் :

**0462 - 2572162**

**0462 - 2572384**

கைபேசி எண்:

90422 37914

பொதுமேலாளர்
மாவட்டத்தொழில் மையம்

மாவட்ட ஆட்சி தலைவர்
திருநெல்வேலி

வெளியீடு

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி.